1979 ஏப்ரல் 25]

ஆ. மகிமைபுரத்தில் மதிய உணவு அருந்திய மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப் பெற்றுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, பேரவை விதி 41-ன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து திருவாளர்கள் மு. அரங்கநாதன், மு. அம்பிகாபதி, செ. சிவசாமி, ஓ. சோ. வேலுச்சாமி, சின்னசேலம் மா. சுப்பிரமணியன், கே. பண்ணை சேதுராமன், துரை முத்துசாமி ஆகியோர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஜெயங்கொண்டானை அடுத்த மகிமைபுரத்தில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் மதிய உணவு சாப்பிட்ட 33 மாணவர்கள் ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருப்பது பற்றியும் அதனால் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்தும்'' என்கிற அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் சரகம் மகிமைபுரம் ஊரில் உள்ள உயர்நிலைப்பள்ளியில் 450 மாணவர்கள் உள்ளனர். அவர்களில் 33 மாணவர்கள் (27 மாணவர்கள், 6 மாணவியர்) இப்பள்ளியோடு இணைந்துள்ள அனாதை விடுதியில் தங்கியுள்ளனர். இந்த அனாதை விடுதியில் வழங்கப்பட்ட கேழ்வரகு (களி), சாம்பார், காய்கறிகள் ஆகியவற்றை உண்ட பிறகு அவர்களுக்கு வாந்தியும் வயிற்று வலி முதலியவையும் ஏற்பட்டன. இவர்களுக்கு 14—3—79 அன்று மாலை சுமார் $5\frac{1}{2}$ மணிக்கு வாந்தியும், வயிற்று வலியும் ஏற்பட்டது. இந்த 33 மாணவர்களும் ஜெயங்கொண்டம் அரசினர் மருத்துவமனையில் இரவு 8 மணிக்குச் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு மருத்துவ அதிகாரி உடனடியாகச் சிகிச்சை அளித்தார். அவர்கள் குணம் அடைந்து 16—3—1979 அனறு இரவு 7 மணிக்கு மருத்துவ மனையிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டனர். மருத்துவசிகிச்சை அளிக்கும்போது எந்த மாணவரும் கடுமையாக பாதிக்கப்படவில்லை என்றும் அனைவரும் ஒரே சீராக நலம் பெற்று வந்தனர் என்றும் மருத்துவ அதிகாரி தெரிவித்து உள்ளார். உணவில் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் கலந்திருந்ததால் அவர்களுக்கு வாந்தியும், வயிற்றுவலியும் ஏற்பட்டிருக்கக்கூடும் என்றும், ஆய்வு செய்வதற்காக, வாந்தி எடுக்கப்பட்ட உணவுப்பொருளில் சிறிதளவு ஏற்கனவே ஆய்வு கூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

[செல்வி. பி. டி. சரஸ்வதி] [1979 ஏப்ரல் 25

இந்நிகழ்ச்சி நடந்த உடனே நோய்த் தொற்றுவதைத் தடுக்க இவ்விடுதியில் உள்ள கிணற்று நீரில் குளோரின் கலக்கப்பட்டது என்பதோடு சமைப்பதற்கான பாத்திரங்களுக்கு ஈயம் பூசப் பட்டது. இனிமேல் இது போன்ற விரும்பத்தகாத நிகழ்ச்சி கள் நடைபெறுவதைத் தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை களை எடுக்குமாறு அந்த உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியரும் விடுதி காப்பாளரும் வன்மையாக அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவை வடித்து அரிசன மாணவர்களுக்கு, பிற்பட்ட மாணவர்களுக்கு விடுதிகளில் தங்கிப்படிக்கக்கூடிய மாணவர் களுக்கு பள்ளிகளில் கொடுக்கப்படுவதால் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். கவனக்குறைவால் அவர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது. இதை எச்சரிக்கையாக அரசாங்கம் எடுத்துக்கொண்டு விடுதிகளில் படிக்கக்கூடிய பிள்ளை களை அலட்சியமாக நடத்தாமல் இருக்கவேண்டும் என்கிற முறையில் தகுந்த நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும். அதற்கு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலை வர் அவர்களே, இது பற்றி அதிகாரிகள் கடுமையாக எச்சரிக்கப் பட்டு இருக்கிறார்கள் என்பதுடன், இது மாதிரி தவறுகள் ஏற் படாமல் இருப்பதற்கு எச்சரிக்கையாக இருக்கும் வகையில் அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறது.

திரு. செ. சிவசாமி : இப்படிப்பட்ட சம்பவம் ஏற்படுவதன காரணமாக தமிழகத்திலே பல இடங்களில் ஏழை குழந்தைகள் உணவு வேண்டாம், சாப்பிட வேண்டாம் என்று சொல்கிறார் கள். அந்த அளவிற்கு அரசு ஏதோ தவறாகச் செய்வதாக நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை மீண்டும் நடக்கா மல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்று எந்தப் புகாரும் அரசின் கவனத்திற்கு குறிப்பாக சமூக நலத்துறையின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, இந்த ஜெயங்கொண்டம் சரகம், மகிமைபுரம் உயர்நிலைப்பள்ளியில் உள்ள 33 மாணவர்கள் மயக்கமுற்றதன் காரணமாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர் கள் விளக்கம் கொடுத்தார்கள். அந்த விளக்கத்தில் சமையல் செய்யப்படும் பாத்திரங்களில் ஈயம் பூசப்படாத காரணத்தால்

1979 ஏப்ரல் 25] [திரு. கே. பண்ணைசேதுராம்]

தான் களிம்பு ஏறி விஷம் கலந்ததுதான் மயக்கமுற்றதற்கான காரணமாக இருந்தது என்று அறிக்கையில் இருந்து அறியப் படுகிறது. ஆகவே ஈயம் பூசப்படாத அந்த பாத்திரங்களை ஈயம் பூசுவதற்கு அமைச்சரவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புவதோடு அதற்குக் காரணமாக இருந்த அதிகாரிகள்மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்பதை யும் அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு பள்ளிக்கூடங்களிலும் உள்ள சமைய லுக்கான பாத்திரங்கள் ஈயம் பூசப்படாமல் இருக்கின்றன. ஆகவே அந்தப் பாத்திரங்கள் அத்தனைக்கும் ஈயம் பூசப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவரவர்களே, நான் அளித்த பதிலிலே, மருத்துவ சிகிச்சை அளிக்கும்போது உணவில் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் கலந்திருந்த தால் அவர்களுக்கு வாந்தியும், வயிற்றுவலியும் ஏற்பட்டிருக்கக் கூடும் என்றுதான் சொன்னேனே தவிர, ஈயம் பூசப்படாததால் அத்தகைய நிலை ஏற்பட்டது என்று சொல்லவில்லை. ஆனாலும் எல்லா அனாதை விடுதிகளுக்கும் எச்சரிக்கையாக நாங்கள் ஏற் கனவே தகவல் அனுப்பி இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: தலைவரவர் களே, கேழ்வரகில் நுண்ணுயிர் இருந்தது என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அது என்ன நுண்ணுயிர் என்று கண்டுபிடித்தாகிவிட்டதா? தமிழ்நாடு முழுவதும் அதே கேழ்வரகுதான் அனுப்பப்பட்டிருக்கும். ஆகவே அதைக் கண்டுபிடித்துப் போக்குவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவரவர்களே, கேழ்வரகில் நுண்ணுயிர் இருக்கிறதா அல்லது வேறு எதிலும் இருக்கிறதா என்பது தெரியவில்லை. அதைக் கண்டு பிடிப் பதற்காகத்தான் அனுப்பி இருக்கிறார்கள். அந்தப் பரிசோத னையின் ரிப்போர்ட் இன்னும் வரவில்லை. அது வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. துரை முத்துசாமி: தலைவரவர்களே, ஹாஸ்டல் களுக்கென்று வழங்கப்படக்கூடிய அரிசியில் வண்டுகளும், புழுக்களும் இருந்ததன் விளைவாகத்தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறதே. அதுமட்டு மல்ல ஹாஸ்டல்களில் அரிசி எப்போதோ வாங்குகிறார்கள். காலம் கழித்து அது உபயோகப்படுத்துகின்றபோது இந்த மாதிரி நிலை ஏற்படுகிறது. ஆகவே மருந்துகளுக்கெல்லாம் காலக்கெடு

[திரு. துரைமுத்துசாமி] [1979 ஏப்ரல் 25

விதிக்கப்பட்டிருப்பதைப் போல அரிசி வாங்கினால் அதையும் 3 மாதங்களுக்குள்ளாக உபயோகப்படுத்திவிட வேண்டும் என்ற ஆணையைப் பிறப்பிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பி. டி. சரஸ்வதி: தலைவரவர்களே, அது பற்றித் தனிக் கேள்வி போட்டால் முழு விவரத்தையும் அதாவது தேவையான பொருட்கள் எங்கெங்கிருந்து வருகின்றது. எப்படி சப்ளை செய்யப்படுகிறது என்பதைத் தெரிவிக்கத் தயாராக இருக்கின்றேன்,

(5) தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்த அறிவிப்புகள் எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. கே. சௌந்திரராசன்: பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவரவர்களே, திருச்சியிலே தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக இருப்பதால் அங்குள்ள மக்கள் அவதிப்படுகிறார்கள் என்பது குறித்து விதி 44-ன் கீழ் ஒரு தீர்மானத்தைக் கொடுத்து இருந்தேன். அது எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை எல்லாம் என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, வரலாற்று புத்தகத்தில் நபிகள் நாயகத்தைப்பற்றி தரக்குறைவாக எழுதி இருக்கிறார்கள் என்பது குறித்து ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தேன்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன். அடுத்து இப்போது மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள்.

(6) அறிவிப்புகள்.

(அ) கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன் வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.